திருப்பதற்குரிய வகையில் சாதாரணமாக பாதிக் கூலியையாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். ஏனென்றால் மூத்து எடுக்கும்போது இந்தத் தொழி லாளர்களின் சேவை மிக முக்கியம். அதனால் அதற்கு வேண்டிய ஒரு நடவடிக்கையை, அரசு துறையின் மூலம் ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987 அன்றுதான் தற்காலிகமாக இது நிறுத் தப்பட்டு இருக்கிறது. ஒரு மாதம்தான் ஆகிறது. இதற்குள் உறுதியாக எதையும் அரசு சொல்வதற்கில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பற்றி அரசு பரிசிலித்து முடிவெடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

(இ) ஓமலூர் தோல் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், திரு. கே. அன்பழகன் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம்—ஓமலூர் புதிய பேருந்து நிலை யத்திற்கு அருகிலிருக்கும் தோல் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பொது மக்களின் சுகாதாரம், விளை நிலங்கள் பாதிப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சேலம் மாவட்டம் ஓமலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கும் வாரச் சந்தையில் தோல் பதனிடும் வேலை யானது உப்பு மட்டுமே சேர்த்து சிறிதளவு தண்ணீர் தெளித்து மேற்கொள்ளப்படுகிறது. இதனால் சிறிதளவு கழிவு நீரே வெளிப்படுகிறது. இது பற்றி குறிப்பான புகார் எதும் பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்ககத்திற்கு

1987 மே 4] [திரு. ப. உ. சண்முகம்]

வரவில்லை. எனினும் இவ்வட்டாரத்தில் தோல் பதனிடும் வேலையினால் வாரச் சந்தையில் வெளிப்படும் கழிவு நீரை சுகாதார முறைப்படி வெளியேற்றுவதற்காக கழிவு நீர் ஊடுருவ முடியாத படி தரை அமைந்துள்ள கொட்டிலை அமைக்குமாறு ஓமலூர் பேரூராட்சி நிர்வாக அலுவலருக்கு அறிவுரை வழங்குமாறு மாவட்ட சுகாதார அலுவலர், திருச்செங்கோடு, அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(ஈ) திடீர் நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி.

திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திடீர் நகர் மற்றும் கோதாமேடு குடிசைப் பகுதிகளுக்கு மாற்று குடியிருப்புகள் கட்டும் திட்டம் அறிவிக்கப் பட்டும் பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை திடீர் நகர், கோதாமேடு மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தர நிவாரணமாகக் குடியிருப்புகள் கட்ட குடிசைப்பகுதி மாற்று வாரிய தீர்மான எண் 43, நாள் 27—2—1986-ல் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க் கண்டுள்ள இரு இடங்களில் 1,152 குடியிருப்புகள், 'அட்கோ' நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ. 187.83 இலட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது :—

1. ரிச்சர்டு பூங்கா (மாநகராட்சி பொது நிலம்)	512 குடியிருப்புகள்
2. வண்ணான்துறை (மாநகராட்சி தனியார் நிலம்)	640 குடியிருப்புகள்
மொத்தம்	1,152 குடியிருப்புகள்